*கவனிக்க.- 2024.06.07 ஆந் திகதிய 2388 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2389 - 2024 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2024.06.14

*2389 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1400 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1401 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1397-B 82579-5,441 (2024/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*
III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*
IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*
VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*
VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*
VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*
    (i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*
    (ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*
    (iii) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*
        (a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*
        (b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*
    (iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*
    (v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*
    (vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*
    (vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*
    (viii) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*
    (ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*
    (x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*
    (xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*
    (xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*
    (xiii) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாகப் பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, யூலை மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர்ப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தீவகம் | தீவகம் (நெடுந்தீவு) பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். |

*06-111*

---

**சுகாதார அமைச்சு**

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையைச் சேர்ந்த மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியலாளர், இயன் மருத்துவ சிகிச்சையாளர், ஒலியியல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்-2024

*சுகாதார அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் பின்வரும் வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்வரும் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

| *குறியீட்டு இலக்கம்* | *வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறி* | *வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்பார்க்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கை* | *பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டப் படிப்பு தகைமைகள்* |
|---|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 154 | மருத்துவ இரசாயனவியலாளர் (B.Sc. Medical Laboratory Science) |
| 2. | கதிரியலாளர் | 200 | கதிரியல் சிகிச்சையாளர் (B.Sc. Radiotherapy)<br>கதிரியல் விஞ்ஞானமானி (B.Sc. Radiography) |
| 3. | இயன் மருத்துவ சிகிச்சையாளர் | 94 | இயன் மருத்துவ சிகிச்சையாளர் (Bachelor in Physiotherapy)<br>விஞ்ஞானமானி (இயன் மருத்துவ சிகிச்சையாளர்) (B.Sc. Physiotherapy) |
| 4. | ஒலியியல் தொழில் நுட்பவியலாளர் | 23 | ஒலியியல் சிறப்புப் பட்டம் B.Sc. in Speech and Hearing Sciences (Specializing in Audiology) |

**குறிப்பு :** வெளிநாட்டு பட்டம் பெற்றுள்ள இலங்கை விண்ணப்பதாரர் எனின் விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு பதவிக்கும் உரியவாறு இலங்கையில் செயற்படுவதற்கு இலங்கை மருத்துவ சபையில் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. ஏனைய பொதுத் தகைமைகள் :-**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்வதற்கு அனைத்து வகையிலும் உடல் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) 2024.07.05 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) உரிய பட்டம் வலுவிற்கு வரும் திகதி (Effective Date) விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

3. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) A4 அளவு கொண்ட கடதாசியை பயன்படுத்தி இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக (இலக்கம் 01 தொடக்கம் 09 வரை முதல் பக்கத்திலும், 10 தொடக்கம் 13 வரை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கியதாக) விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பட்டச் சான்றிதழில் மற்றும் GPA மதிப்பீட்டைக் காட்டுகின்ற சான்றிதழில் சுயமாகவே உண்மை என உறுதிப்படுத்திய பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் இலங்கை வங்கி, தெப்ரோபிறேன், இல. 7041318 எனும் "சுகாதார செயலாளர்-பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு ரூபா 1,000.00 இனை வரவு வைத்து பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டவேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளவும்)

(இ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 393,684 இற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய சம்பளம் பெறும் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 9×4 அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்"நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்த்தல்-2024" எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றைக் குறிப்பிட்டு 2024.07.05 ஆம் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார அமைச்சு, சுவசிறிபாய, 385, வண. பத்தேகம விமலவங்ச தோர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு** :- மேலே 2 மற்றும் 3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியான 2024.07.05 தினத்தன்று எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. அரசாங்க அல்லது பகுதியளவு அரச நிறுவனத்தில் கடமை புரிகின்ற உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவர்களது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் இது வெளிவாரி ஆட்சேர்ப்பு என்பதால் உரிய பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தாலும் அல்லது முடியாததாக இருந்தாலும் எந்த வகையிலும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீளத் திரும்ப முடியாது என நினைவில் கொள்ள வேண்டும்.

5. இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காத, முழுமையடையாத, மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகாத, அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யாத, வங்கி பற்றுச்சீட்டை இணைக்காத மற்றும் 2024.07.05 அன்று அல்லது அதற்கு முன் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறிவிக்கப்பட மாட்டாது.

6. சுகாதார அமைச்சின் அத்தியாவசிய பதவிகளுக்காக பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அங்கீகாரத்தைக் கோரல் பற்றிய 2024.03.28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/0016/2023 ஆம் இலக்க 2023.12.15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை தற்பொழுது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ள சிரேஸ்ட நிலையின் ஒழுங்குமுறையில் வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அவ்வாறே மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் உரிய தினத்துக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள

பட்டதாரிகளில் பட்டம் வலுப்பெறும் திகதி (Effective Date) மற்றும் பட்டத்தின் தரத்திற்கான பொது மதிப்பீடு (GPA) அடிப்படையாகக் கொண்டு தேர்ச்சிப்பட்டியல் தயாரித்து ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

7. (அ) பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை சேவைத் தேவையைப் பொறுத்து சுகாதார அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஏதும் சிக்கலான நிலைமை ஏற்படும் பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பத்தில் மருத்துவ விடயங்களுக்காக நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 7.2.4 ஆட்சேர்ப்பு முறையின் குறிப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் தீர்மானமொன்று எடுக்கப்படும். நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரரினால் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றிதழ்
(2) பட்டப்படிப்புச்சான்றிதழின் மூலப்பிரதி (இதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்)
(3) க.பொ.த. (சா./த.) மற்றும் க.பொ.த. (உ./த.) பரீட்சை பெறுபேறுகளின் மூலப்பிரதி
(4) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்
(5) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிட சான்றிதழ் (கிராம அலுவலர் சான்றிதழ்)

8. பயிற்சி திட்டம்:-

(அ) நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் விண்ணப்பதாரிகளில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிகள் ஆங்கில மொழியில் தொடர்வதற்காக 06 மாத காலங்களுக்கு நாட்டிலுள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

(ஆ) அவ்வாறு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் இணைத்துக் கொள்ளப்படும் பயிலுனர்கள் உரிய மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனனங்களில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சியின் நிறைவில் பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்யாத அல்லது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமற்ற அல்லது தாம் இணைக்கப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட தவறும் பயிலுனர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்ட ஈடுகளும் இன்றி பயிலுனர்களின் பயிற்சி முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

(ஈ) பயிற்சிக்காலத்தில் பயிலுனர்களுக்கு சுகாதார அமைச்சு செயலாளரின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள பொதுச் சுற்றறிக்கை இலக்கம் 01-32/2017 மற்றும் 2017.06.07 ஆந் திகதியிட்ட கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் நேரொத்த அமைச்சில் அல்லது மாகாண சபைக்குரிய நியமிக்கப்பட்ட மருத்துவமனையில் தனது பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார அமைச்சின் விடயத்துக்குப் பொறுப்பான செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். குறித்த ஒப்பந்தம் மற்றும் பிணை பயிற்சிக்காக பதிவு செய்யும் தினத்தன்று அமைச்சின் கற்கை, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் பயிற்சிக் காலத்தின் போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் அல்லது மேற்படி 9 (இ) பிரிவின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (05) வருடங்கள் உரிய பதவியில் சேவை செய்வதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் ஒப்பந்தம் மற்றும் பிணைக்குரிய தொகை என்பன அவரினால் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

*9.* **சேவையிலீடுபடுவதற்கான நியதிகள் :** மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியலாளர், இயன் மருத்துவ சிகிச்சையாளர், ஒலியியல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவுடன் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு கட்டுப்படாது என்பதுடன் ஒவ்வொரு பதவியிலும் நிரந்தர நியமனம் வழங்குவது / வழங்காதது குறித்த தீர்மானம் அந்த சந்தர்ப்பத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாக இருக்கும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த ஆட்சேர்ப்புத் திட்ட நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் வகுப்பு பதவியில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி பந்தி 1 இல் குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் பதவிக்காக அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன்படி, MT-6-2016 இன் பிரகாரம் ரூபா 32,080.00-445x10-660x11-730x10-750x10 ரூபா 58,590 எனும் சம்பள அளவுத் திட்டம் உரித்தாகுவதுடன், கொடுப்பனவுகள் பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைய வழங்கப்படும்.

*10.* விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்கள் மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கப்படல் வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமானால், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவருக்கு வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படும். அத்துடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

*11.* தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சி நெறியை கற்பதற்கும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனையின் போது தகுதியற்றவராக காணப்படுவாராயின் விண்ணப்பதாரிகள் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

*12.* மேற்படி இணைத்துக் கொள்ளப்பட்ட சகலரும் அரச ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகள், நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும், அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்கள், கட்டளைகள் என்பவற்றிற்கும் கட்டுப்படல் வேண்டும்.

*13.* பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்பாடாது.

*14.* பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய அறிவித்தல்களில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

வைத்தியர் பீ. ஜீ. மஹிபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2024, யூன் 13.

<u>மாதிரி விண்ணப்பப்படிவம்</u>

| பயிற்சி நெறிக்குரிய குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்) |
|---|
| |

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையைச் சேர்ந்த மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியலாளர், இயன் மருத்துவ சிகிச்சையாளர், ஒலியியல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்-2024

(விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.)

விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................

விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில் :..........................................................................................

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் உ-ம்:- A.B.C. SILVA)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................................................................
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :............................................................. (பிரதியொன்றை இணைக்கவும்)

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |

4. (அ) நிரந்தர முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |

(ஆ) தொலைபேசி இலக்கம் :

| கையடக்க: | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான: | | | | | | | | | | |

(இ) வதிவிட மாவட்டம் : சிங்களத்தில் / தமிழில் :- .................... ஆங்கிலத்தில் :- ....................
(ஈ) நீங்கள் இம்மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவரா ? ஆம் / இல்லை :- ......................................
(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் :- ..........................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு :........................... மாதம் : ........................... திகதி : ...........................

2024.07.05 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :- ............ மாதங்கள் :- ............ நாட்கள் :- ............

6. பால் : ஆண்: ☐ பெண்: ☐ (உரிய கூட்டில் " ✓ " எனும் குறியீட்டை இடவும்)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ? ஆம்: ☐ இல்லை: ☐ (உரிய கூட்டில் " ✓ " எனும் குறியீட்டை இடவும்)

8. விவாக நிலைமை : விவாகமானவர்: ☐ விவாகமாகாதவர்: ☐

9. கல்வித் தகைமைகள் :

| குறியீட்டு இல. | சித்தியடைந்த பட்டம் | சித்தியடைந்த தரம் | தரத்தின் புள்ளி மதிப்பீடு (GPA) மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி | பல்கலைக்கழகம் | கல்வியாண்டு | போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

10. நீங்கள் ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?
ஆம்: ☐ இல்லை: ☐
(பொருத்தமான கூட்டில் " ✓ " குறிப்பிடுக.) ஆம் எனில் காரணத்தைக் குறிப்பிடுக :
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) என்னால் இந்த வர்த்தமானி அறிவித்தலை வாசித்து தெளிவு பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதெனவும் நான் வேறு எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை எனவும் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் பயிற்சிக்கு தகைமையற்றவன் ஆவேன் என்றும் நியமனத்தின் பின் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்றும் நான் நன்கறிவேன்.

| |
|---|
| இலங்கை வங்கி, தபுரோபேன் கிளையில், இல. 7041318 எனும் கணக்கிற்கு சுகாதார செயலாளர் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு உரிய பணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும். |

திகதி ....................................
....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .......................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்பதையும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் .......................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

திகதி :- ..........................................................................................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : .................................................................
பதவி : ..........................................................................................................
முகவரி : ..........................................................................................................

13. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் / மாகாண அரசாங்க சேவையில் ஊழியராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை: (பொருத்தமற்றவற்றை வெட்டிவிடவும்)

(i) மேற்படி விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................... அவர்கள் இத் திணைக்களத்தில் .......... ............................................... பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

திகதி :.................................................. ....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பெயர் : .............................................................................................................
பதவி :.............................................................................................................................................
முகவரி : ...........................................................................................................................................
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை: ..........................................................................................

06-148

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள்/ புள்ளிவிபரவியலாளர்கள் பொருட்டான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2024)

## First Efficiency Bar Examination for Senior Statisticians/Statisticians of the Department of Census and Statistics - 2016 (2024)

1. சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள்/ புள்ளிவிபரவியலாளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2024, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப் பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குரிய பாடங்களில் ஒரே தடவையாகவோ அல்லது வெவ்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும். இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடம் பொருட்டு ரூபா 600.00 உம், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் ரூபா 1,200.00 உம் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் அல்லது ஏதேனும் மாவட்ட/ பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் பொருட்டு காசுக்கட்டளையோ அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவம் இவறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்க ஏ4 தாளில் இரு பக்கங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 4 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் இருக்கும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம்

தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவரின் ஊடாக 2024, யூலை 12 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது தபாலுறையின் இடப்பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** : பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல், திணைக்களத் தலைவரின் சான்றுரை என்பன சகிதம் சரியாக நிரப்பி அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அங்கு விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றை கைவசம் வைத்திருத்தல் முக்கியமானது. கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை பெறுவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களும் குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிப்பதன் மூலம் விசாரிப்பது ஏற்றதாகும்.

7. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது, நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய முதல் நாளிலேயே பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடனான உத்தியோகத்தர்களில் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களுக்கு திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது. தமக்கு உரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களுக்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

11. **பரீட்சைப் பாடத்திட்டம்** :

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | காலம் | புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 2 மணி. | 100 | 40% |
| 2. அரசாங்க துறை நிதி முகாமைத்துவம் | 2 மணி. | 100 | 40% |
| 3. ஆங்கிலம் | 2 மணி. | 100 | 40% |
| 4. பிரயோகப் புள்ளி விபரம் | 3 மணி. | 100 | 40% |

(1) ***நிர்வாகம்*** - (பாட இல. 01) :

பகுதி I - நிர்வாகம்

பகுதி II - அலுவலக, வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் ஒழுங்கமைப்பு முறைகள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அதிகாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படும். VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

- வினாத்தாளின் கட்டமைப்பு :-
  - (a) ஒரு பகுதிக்கு நான்கு வினாக்கள் வீதம் வினாத்தாள், இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - (b) I, II பகுதிகளில் குறைந்தபட்சம் இரண்டு வினாக்கள் வீதம் தெரிவுசெய்து ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - (c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(2) ***அரசாங்க துறை நிதி முகாமைத்துவம்*** (பாட இல. 2)

நிதி ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்பட்ட அதிகாரங்கள்:

I - சகல பிரிவுகளும்
II - சகல பிரிவுகளும்
III - சகல பிரிவுகளும்
IV - சகல பிரிவுகளும்
V - 1, 2, 3, 4 ஆம் பிரிவுகள்
VI - சகல பிரிவுகளும்
VII - 1, 2, 3, 4 மற்றும் 6 பிரிவுகள்

- வினாத்தாளின் கட்டமைப்பு :-
  - (a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான ஆறு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - (b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - (c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(3) ***ஆங்கிலம்*** (பாட இல. 03)

**English Grammar :**

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/Compound/ Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

**Writing Skills** :

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

**Reading Skills** :

Candidate's ability to comprehend a printed text; infer meaning and verbal/written interpretation is expected.

* Reading and understanding the specific and general meaning of the printed text.
* Reading and interpretation (Verbal/Written)
* Understanding the Cohesion and coherence of a passage.

- வினாத்தாளின் கட்டமைப்பு :-

(a) வினாத்தாள் பின்வரும் விடயங்கள் சம்பந்தப்பட்ட வினாக்களை கொண்டுள்ளது.

I. இலக்கணம்
II. கிரகித்தல்
III. மரபுத்தொடர்
IV. கட்டுரை

(b) சகல வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) ***பிரயோகப் புள்ளிவிபரம்*** (பாட இல. 04) : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத்தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக்குகள், தகவல் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகை மதிப்பு மற்றும் மக்களியல், விலைச் சுட்டெண்கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

- வினாத்தாளின் கட்டமைப்பு :-

(a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான எட்டு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதி யளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.

(b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்காக 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துவதற்கு சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரர்களுக்கு வசதியுண்டு.

12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே அதிகாரபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துாவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2024)**

First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2016 (2024)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

1.
1.1 முழுப்பெயர் :........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(உதாரணம்- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் :
........................................................................
(உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் :........................................................................
(தமிழில்/ சிங்களத்தில்)

2. அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :
2.1 அலுவலகத்தின் பெயர் :..........................................
2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..........................................
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிலிடப்படும்)

3. 3.1ஆண்/ பெண் பிரிவு :
ஆண்-0
பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.3 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.4 கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. நீங்கள் தோற்றவுள்ள வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5. தற்போது வகிக்கும் பதவி :.....................................................................................

5.1 நியமனக் கடித இலக்கம் :.....................................................................................

5.2 நியமனத் திகதி :.....................................................................................

6. நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :.....................................................................................

6.1 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :.....................................................................................

6.2 பற்றுச்சீட்டு இல. :.....................................................................................

6.3 திகதி :.....................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் எனவும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :...............................................

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ............................................. எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ............................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், குறித்த பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

.......................................................
சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :.........................................................................
பதவி :.........................................................................
முகவரி :.........................................................................
திகதி :.........................................................................
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்.

பெயர் :.........................................................................
பதவி :.........................................................................
முகவரி :.........................................................................
திகதி :.........................................................................

06-98

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2024)

## Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2016(2024)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2024, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

02. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான இரு தடவைகளில் தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்திற்கு பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ முடியாது.

04. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 01 இலிருந்து 05 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவர் ஊடாக, 2024, யூலை மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) 2024, யூன் 17 ஆந் திகதி முதல் இணையவழி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

05. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு, விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.3 பரீட்சை தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

07. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் மொழி மூலமாகத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

8.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 2 மணி. | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணி. | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | * இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களின் மீதும் திருத்தஞ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த வினாக்களின் எண்ணிக்கை 06. கேள்வி 1, 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |
| 2 | நிதி ஒழுங்குவிதிகள் | இது நிதி ஒழுங்குவிதிகளின்கீழ்க் குறிப்பிட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :<br><br>(அ) அத்தியாயம் VI - பொது நிதியின் கட்டுக்காப்பு, அக்கறைத்தொகை, வங்கி கணக்குகள்.<br>* பகுதி 1 - பொது நிதியின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு (Custody and safety).<br>* பகுதி 2 - அடிக்கட்டை புத்தகம் (Counterfoil Book).<br>* பகுதி 3 - நாணயம், முத்திரைகள் போன்றவற்றின் கற்றாய்வுச் சபை (Board of Survey).<br>* பகுதி 4 - அக்கறைத்தொகை (Imprest).<br>* பகுதி 5 - வங்கி கணக்குகள்<br><br>(நிதி ஒழுங்கு விதிகள் 315 முதல் 396 வரை மற்றும் அவற்றின் திருத்தங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.) |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 2 | நிதி ஒழுங்குவிதிகள் (தொடர்ச்சி) | (அ) கொள்முதல் வழிகாட்டல்கள் 2006 – கொள்முதல் செயன்முறை மற்றும் பொருட்கள் மற்றும் வேலையின் கீழ் உள்ள அனைத்து திருத்தங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். (அவற்றின் சகல திருத்தங்கள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். (அத்தியாயம் XIII - வேலை மற்றும் சேவைகளை வழங்குவதற்கான கொள்முதல் செயன்முறை, பண்டகசாலை கணக்கெடுப்பு, பண்டகசாலை செயன்முறை, ஒப்பந்தம், கேள்விப்பத்திர நடைமுறையிலிருந்து விலகல் (நிதி ஒழுங்குவிதிகள் 708 முதல் 775 வரை)<br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1, 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

**குறிப்பு** :

* மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

* குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
“சங்கியான மந்திரய”,
இல. 306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016(2024)**

Second Efficiency Bar Examination for Grade 1 Statistical Officers in the Department of Census and Statistics - 2016(2024)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் – 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..............................................
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..............................................
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :..............................................

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :......................
..............................................
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (தமிழில்/சிங்களத்தில்) :......................
..............................................

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..............................................

2.4 கையடக்க தொலைபேசி இலக்கம் :

நிலையான தொலைபேசி இலக்கம் :

03. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

04. பால் (ஆண்/பெண்) :
ஆண் – 0
பெண் – 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

06. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :........................................................................................................................................................

7.2 நியமனக் கடித இலக்கம் :............................................................................................................................

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :...........................................................................

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :.........................................................................

8.3 பற்றுச்சீட்டு இல. :...........................................................................................................................

8.4 திகதி :........................................................................................................................................................

| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |
|---|

09. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவரென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................. செலுத்திப்பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன் படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

...............................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :.............................

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**10. கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

...............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :...................................................................
பதவி :..................................................................
முகவரி :..............................................................
திகதி :...................................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

11. **திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :.......................................................
பதவி :......................................................
முகவரி :.......................................................
திகதி :.......................................................

06-99/1

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2024)**

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2016 (2024)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2024, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

02. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்டச்/பிரதேசச் செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பப்படிவம்** : விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 01 இலிருந்து 05 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவர் ஊடாக, 2024, யூலை மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடிதஉறையின் இடப் பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) 2024, யூன் 17 ஆந் திகதி முதல் இணையவழி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

05. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**: பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

06.1 பரீட்சைக்கு, விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

06.3 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

07. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

08. 1. இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

08. 2. பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**:

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | 2 மணி. | 100 | 40% |
| 2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 2 மணி. | 100 | 40% |
| 3. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணி. | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1 | அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனைக் கோட்பாடுகளும் $X^2$ சோதனையும், இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆகாரம், இடையம், இடை), மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடு நுட்பத் தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வலு, மாதிரியெடுப்பல்லா வலு, சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணப் பிற்செலவு, அடிப்படைப் புள்ளி விபர அறிவு<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br><br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |
| 2 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் அத்தியாயங்கள்: II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX மற்றும் மேற்படி அத்தியாயங்களுக்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br><br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 3 | நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :-<br><br>* I ஆம் அதிகாரம்.- வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி. ஒ. 1-68 வரை)<br><br>* III ஆம் அதிகாரம்.- நிதி முகாமையும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுபடுத்தல், வேலைகளைக் குறித்தொதுக்குதல் (நி. ஒ. 124-147 வரை)<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br><br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

**குறிப்பு**.-

* மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
* குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2024)**

First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2016 (2024)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.............................................................................................................
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.............................................................................................................
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :.............................................................................................................

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :......................
.................................................................................................
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (தமிழில்/சிங்களத்தில்) :...................................
.............................................................................................................

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.............................................................................................................

2.4 கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பால் (ஆண்/பெண்) :
ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

06. பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :..........................................................................................................

7.2 நியமனக் கடிதம் இலக்கம் :..........................................................................................................

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :..........................................................................................

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :..........................................................................................

8.3 பற்றுச்சீட்டு இல. :..........................................................................................................

8.4 திகதி :..........................................................................................................

| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |
|---|

09. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவரென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................. செலுத்திப்பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன் படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

..............................................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :.......................

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

10. **கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

..............................................,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :......................................................
பதவி :......................................................
முகவரி :......................................................
திகதி :......................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

11. **திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

........................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :......................................................
பதவி :......................................................
முகவரி :......................................................
திகதி :......................................................

06-99/2

**விவசாயத் திணைக்களம்**

விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை (NVQ 5) பயில்வதற்காக இலங்கை விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2024

**Open competitive Examination for the enrollment of students for the National Diploma in Agricultural Production Technology (NVQ 5) in Sri Lanka School of Agriculture - 2024**

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இலங்கை விவசாயப் பாடசாலைகளில் நடைபெறும் "விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2025/2026 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் கோரப்படுகின்றது. இப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சை பிரிவினால் 2024, ஒற்றோபர் மாதத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறி

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ 5) மட்டம் 5 வழங்கப்படுகின்றது.

2.2 இக் கற்கைநெறியானது விவசாயத் திணைக்களத்தின் அநுராதபுரம், பிபிலை, லபுதுவை, பாலமுனை, பரந்தன், வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான கற்கைநெறியாக மேற்கொள்ளப்படுகின்றது.

2.3 இக்கற்கை நெறிக்கான காலம் 1 ½ வருடங்களாகும். இதில் ஒரு வருடம் விவசாயப் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கப்படும். மேலும் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 06 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றினை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2.4 ஆங்கில மொழியில் மட்டும் நடத்தப்படும் இக்கற்கை நெறியானது முழு நேர உள்ளகக் கற்கைநெறியாகும்.

2.5 மாணவர் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கை நெறியினை பயில்வதற்கு தகைமை பெற்றவர்களின் தகைமைகளின் உண்மைநிலையானது நேர்முகப் பரீட்சை மூலம் பரீட்சிக்கப்பட்டதன் பின்பே விவசாயப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2.6 இக்கற்கை நெறிக்கு க.பொ.த(உயர் தர) தகைமையின் அடிப்படையிலும் மற்றும் விவசாயத் துறையில் தேசிய தொழிற் தகைமை நிலை 04 (NVQ level 04) கற்கை நெறியினை பயின்று பெற்றுக் கொண்ட தகைமையின் அடிப்படையிலும் விண்ணப்பிக்கலாம்.

03. **கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 **க.பொ.த (உயர் தர) தகைமையின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு :**

3.1.1 **கல்வித் தகைமைகள்**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் பௌதீகவியல் /விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஆகக்குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகியவற்றில் மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம்**: க.பொ.த உயர் தர பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.1.2 **வயது** :

விண்ணப்பதாரிகள் 2024.07.14 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்ப தாரியின் பிறந்த தினமானது 2006.07.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1999.07.14 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.2 விவசாயத் துறையில் தேசிய தொழில் சார் தகைமை மட்டம் 4 (NVQ Level 4) பாடநெறி ஒன்றினை பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு

3.2.1 **கல்வித் தகைமைகள்**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி **(S)** பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ 4) இல் கீழே தரப்பட்டுள்ள பாடநெறியொன்றை பயின்று மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ 4) சான்றிதழினை பெற்றிருத்தல்

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
- நில அலங்கார வினைஞர்
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்பான விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை 04 (NVQ 4) இல் வேறு ஏதேனும் பாடநெறி ஒன்று

3.2.2 **வயது**

விண்ணப்பதாரிகள் 2024.07.14 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்ப தாரியின் பிறந்த தினமானது 2006.07.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1989.07.14 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது. எனவே இக்கற்கைநெறியினை கற்பதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். கற்கை நெறியில் சேரும் தருணத்தில் கர்ப்பமாக இருந்தால் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கும் கற்கை நெறியில் சேர்ந்த பின்னர் கர்ப்பமாவது கற்கை நெறியில் இருந்து விலக்குவதற்கும் காரணமாக அமையும்.

(இக் கற்கை நெறிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் உடல் மற்றும் உள ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அரச வைத்தியர் ஒருவரிடம் பெற்றுக் கொண்ட வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.)

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடையவராகமாட்டார்கள்.

3.5 அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

04. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் மொழி**

4.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டும் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

4.2 போட்டிப் பரீட்சை கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 2024 ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்படும். விண்ணபப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விருப்பமுடைய நகரம் மற்றும் அதற்குரிய இலக்கத்தினை குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

| நகர இல. | நகரம் |
|---|---|
| 1 | அம்பாறை |
| 2 | அனுராதபுரம் |
| 3 | தம்புள்ளை |
| 4 | கம்பஹா |
| 5 | காலி |
| 6 | அம்பாந்தோட்டை |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | வவுனியா |

4.3 குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றிக்கு போதியளவு எண்ணிக்கையான பரீட்சாத்திகள் விண்ணப்பிக்காதவிடத்து அல்லது வேறு ஏதேனும் செயன்முறை பிரச்சினைகள் ஏற்படுமாயின் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ள பரீட்சை நிலையத்திற்கு பதிலாக வேறு ஒரு பரீட்சை நிலையம் விவசாயத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும்.

05. **விண்ணப்பப்படிவங்கள் கோரல் :**

5.1 இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் நிகழ்நிலை (online) முறை மூலம் மேற்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

5.2 பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1300.00 ஆகும். மக்கள் வங்கி பேராதனை கிளையில் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 057100179027204 கொண்ட கணக்கிற்கு பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றுச் சீட்டு வழங்கப்பட்ட திகதி, கிளை மற்றும் இலக்கம் விண்ணப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

5.3 விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தொடர்பான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 081-2388340 அல்லது 081-2388341 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்.

5.4 பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கவோ, வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றி அளிக்கவோ முடியாது.

5.5 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2024.07.14 திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் விண்ணப்பப்படிவம் இணையத் தளத்திலிருந்து அகற்றப்படும்.

5.6 நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தின் கடின நகல் (Hard copy) பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

5.7 இன் கடின நகல் (Hard Copy) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளுடன் கட்டாயமாக பதிவுத் தபாலில் 2024.07.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (விரிவாக்கற் பயிற்சி) விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய டிப்ளோமா கற்கை நெறி (NVQ-5) என குறிப்பிட வேண்டும்.

**இணைப்பு**

அ. க.பொ.த (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலான விண்ணப்பதாரிகளுக்கு
i. க.பொ.த (சாதாரண) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ் பிரதி
ii. க.பொ.த (உயர்தர) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ் பிரதி
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய அடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

ஆ. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) பாடநெறியினை நிறைவு செய்து விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு சான்றிதழ் பெற்றவர்கள்
i. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ்
ii. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழ்
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய அடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிரமாதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பபடிவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களம் பொறுபேற்காது.

5.8 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல இணைப்புக்களினதும் கடின நகல் பிரதியானது விவசாயத் திணைக்களத்திற்கு கிடைக்காவிடின் பரீட்சை எழுதுவதற்கான தகுதியை இழந்ததாகக் கருதப்படும். எனவே குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய சீட்டு ஆகியவற்றின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும்.

06. **அடையாளத்தை உறுதி செய்தல்**

6.1 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் அவர்கள் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை மட்டும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

07. **பரீட்சை முறைமை** :

7.1 போட்டிப் பரீட்சை விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை என்பன முறையே 01 மணித்தியாலம் என்ற வகையில் நடைபெறுவதுடன், ஒவ்வொரு விடயத்திற்கும் 100 மதிப்பெண்கள் என்ற வகையில் வழங்கப்பட்டு இறுதி மதிப்பெண்ணாக 200 இற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் அறிவிக்கப்படும்.

7.2 ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 30% மதிப்பெண்கள் பெற வேண்டும்.

7.3 **பாடவிதானம்**:
விவசாயம்: க.பொ.த (சாதாரண தரம்) விவசாயப் பாடத்திற்கமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விவேகப் பரீட்சை**
இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் 50 இனை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டின் கடின நகலை சரியான முறையில் இணைத்து, அத்துடன் 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய இணைப்புக்களையும் இணைத்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அது தொடர்பாக குறுஞ் செய்தி மூலம், விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவின் மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கான அனுமதி பத்திரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பான விபரங்களை 081-2388085 அல்லது 081-2388059 என்ற இலக்கம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

7.5 விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிகளான ஈமெயில் முகவரி, Whatsapp இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை ஆட்சேர்ப்பு நடவடிக்கை நிறைவு பெறும்வரை மாற்றாமல் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். அந்த இலக்கங்களை மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

7.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஒருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் உறுதிப்படுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.7 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.8 பரீட்சையினை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்டத் திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.9 போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் விவசாயத் திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும் இம்மதிப் பெண்களின் அடிப்படையில் மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமையும் மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு எதுவித மதிப்பெண்களும் வழங்கப்பட மாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7.10 பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.11 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

08. **தெரிவு செய்யப்படும் முறை :**

8.1 இப் பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 90% க.பொ.த (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலும் 10% தேசிய தொழிற் தகைமை 4 (NVQ level 4) தகைமையின் அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

8.2 குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆண், பெண் விடுதிகளில் உள்ள இடவசதி மற்றும் அப்பாடசாலைகளில் கற்கை நெறிக்கான வசதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மதிப்பெண் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே மாறுபடக்கூடும்.

8.3 யாரேனும் ஒரு விண்ணப்பதாரி இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்காக மேற்கொள்ளும் முறையற்ற செல்வாக்கு மற்றும் பிழையான செயற்பாடுகள் அவர் இப்பாடநெறியை தொடர்வதற்கு தகைமையற்றவராவதற்கு காரணமாக அமையும்.

8.4 விவசாயக் கல்லூரியில் பாடநெறியினை தொடருவதற்கான தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகள் விவசாயக் கல்லூரிகளுக்கு இணைத்து கொள்ளப்பட்ட பின்னர் அவர்களுக்கு விவசாயக் கல்லூரிகளை மாற்ற முடியாது.

8.5 இப்பாடநெறியானது முழுமையான தங்குமிட வசதியுடன் கூடிய பாடநெறி ஒன்றாகையால் இப்பாடநெறியினை கைவிட்டு செல்லும் எவருக்கும் மீண்டும் இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

8.6 பாடநெறிக்கு மாணவர்களை இணைத்து கொள்வது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

8.7 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
திகதி:

06-100

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

மேற்கத்திய சங்கீத எழுத்துப் பரீட்சை – 2024

தரம் I இலிருந்து தரம் VIII வரை மற்றும் டிப்ளோமா

ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும் மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2024, யூன் 14 ஆந் திகதி தொடக்கம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.doenets.lk) விண்ணப்பப்படிவத்தைப் பெற முடியும் என்பதுடன் தபால் மூலமும் நேரிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களைத் தபால் மூலம் பெறும் விண்ணப்பதாரிகள், தமது பெயரும் முகவரியும் எழுதப்பட்டு ரூபா 50 பெறுமதியான செல்லுபடியாகும் முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுடைய கடித உறையுடன் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் 2024, யூன் 28 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தலும் வேண்டும்.

முகவரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் "மேற்கத்திய சங்கீத எழுத்துப் பரீட்சை - 2024" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

நேரில் வந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்வோர் திணைக்களத்தின் விசாரணைக் கூடத்தில் 2024, யூலை மாதம் 10 ஆந் திகதி வரை அதனை பெற்றுக்கொள்ள முடியும் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை தபால் மூலம் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024, யூலை மாதம் 12 ஆந் திகதியாகும்.
தொலைபேசி 011-2785230, 011-2177075
தொலைநகல் 011-2784232

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்லை.

06-105

**கல்வி அமைச்சு**

*நாட்டின் பெருந்தோட்டப்புற தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு பாடசாலை அடிப்படையில் ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2024*

நாட்டின் பெருந்தோட்டப்புற தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கு பாடசாலை அடிப்படையில் ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமைகளைக் கொண்ட பெண்கள், ஆண்கள் ஆகிய இருசாராரிடமிருந்தும் விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தின் “Our Services” இன் கீழ் உள்ள “Online Applications - Recruitment Exams” எனும் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) முறையூடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2024.06.14 ஆந் திகதியன்று மு.ப 09.00 மணிக்கு ஆரம்பித்து 2024.07.12 ஆந் திகதியன்று பி.ப 09.00 மணிக்கு நிறைவடையும். இதற்கான பரீட்சை 2024, ஓகத்து மாதத்தில் நடாத்தப்படும்.

02. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை**:

2.1 இதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இவ் வர்த்தமானி அறிவித்தலின் 10.1 ஆம் பந்தியின் படி எழுத்து மூலப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

2.2 எழுத்து மூலப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாப்பத்திரங்களுக்கும் புள்ளிகளாக 40% சதவீதமான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களது மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு (03) எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் 10.2 ஆம் பந்தியின் படி பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொது நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களது பெயர் பட்டியல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் பிரசுரிக்கப்படும் (தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்)

2.3 பொது நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.3 ஆம் பந்தியின் படி பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பிரயோகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் கல்வி அமைச்சினால் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

2.4 பிரயோகப் பரீட்சை மற்றும் எழுத்து மூலப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை வரிசைப்படி, விண்ணப்பித்துள்ள பாடத்திற்கமைய பாடசாலை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.5 இவ் வர்த்தமானி அறிவித்தலுக்குரிய நியமனப் பாடங்களுக்குரிய வெற்றிடங்கள் உப அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் உதவியாளர் வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**குறிப்பு 1**

ஒரே பாடசாலைக்கு விருப்பம் தெரிவித்துள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் சம புள்ளிகளைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலைகளுக்கு நிலைப்படுத்துதல் தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் தீர்மானமெடுக்கப்படும்.

2.6 இந்த ஆட்சேர்ப்பானது பாடசாலைகளை அடிப்படையாக கொண்டு நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் காரணத்தினால் பத்து வருடங்கள் (10) செல்லும் வரையில் ஒரு போதும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

03. **சேவையில் ஈடுபடச் செய்வதற்கான நிபந்தனைகள்**:

3.1 உரிய எழுத்து மூலப் பரீட்சை புள்ளிகள் மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசையினை அடிப்படையாக கொண்டு பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்கள் நிலவும் அரச பாடசாலைகளுக்கு 05 வருட காலப் பகுதிக்கு ஆசிரியர் உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

3.2 ஆசிரியர் உதவியாளர்களாக தமது முதல் நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்களுக்கும் தாம் நியமிக்கப்பட்ட பாடத்திற்குரியதாக இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய கல்வி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஆசிரியர் பயிற்சியொன்றை அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் உரிய பாடம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், குறித்த ஆசிரியர் பயிற்சி அல்லது பட்டம்

செல்லுபடியாகும் திகதி முதல் அவர் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) அல்லது 3-I (ஆ) தரங்களுக்கு நிரந்தரமாக நியமனம் வழங்கப்படும்.

3.3 உரிய ஐந்து (5) வருட காலப் பகுதியினுள் மேலே (3.2) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் ஆசிரியர் உதவியாளர்களது சேவை முடிவுறுத்தப்படும்.

3.4 நியமனம் வழங்கும் போது பெருந்தோட்ட பாடசாலைகள் அமைந்துள்ள வலயங்களில் வதியும் விண்ணப்ப தாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் திணைக்களம் சார் ஏனைய விதிமுறைகளுக்கு இந் நியமனம் உட்படுகின்றது.

3.6 2014.10.23ம் திகதியுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும், அச் சேவைப் பிரமாணக் குறிப்பில் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந் நியமனமானது உட்படுகின்றது.

04. **சம்பள அளவுத் திட்டம்:** ஆசிரியர் உதவியாளர்களாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்களாக மாதாந்தம் ரூ. 20,000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

05. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1 2014.10.23ம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம் 2024.06.14 ஆந் திகதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.2 கல்வி அமைச்சின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக்கமைய க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உயர் தர) பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் தொடர்ச்சியான 2 வருடங்களுக்குள் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில், விண்ணப்பிக்கும் பாடத்திற்கு திறமைச் சித்தி உட்படலாக 3 திறமைச் சித்திகளுடன் தாய் மொழி மற்றும் கணிதம் உட்படலாக 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு 2**

இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கமைய ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில் ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த (சா.த) பரீட்சைக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளவர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

5.1.4. **வயதெல்லை:**

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 35 வருடங்களைத் தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.

அதன் படி 2006.06.14 அல்லது அதற்கு முன்னரும் 1989.06.14ம் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த தினத்தை உடையவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க தகுதி பெறுவார்கள்)

5.1.5. **ஏனைய தேவைகள்:**

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு, இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரர்கள் பெருந்தோட்டப்புறப் பிரதேசமொன்றில் (உப அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி வலயம் அமைந்துள்ள பிரதேசமொன்றில்) நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட வாக்களர் பெயர் பட்டியலின் பிரதி மற்றும் அண்மையில் பெற்றுக் கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் முன்வைக்கப்படல் வேண்டும்.

v. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

vi. இப் பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் தோற்றுவார்களாயின் அது தொடர்பில் கட்டாயமாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள், விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றுடன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனங்கள் பரீட்சை ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

06. **விண்ணப்பிக்கும் முறை**:

6.1 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். நிகழ்நிலை மூலம் விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது ஆலோசனைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது இவ் ஆலோசனைகளை முறையாக பின்பற்றவும். நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த விண்ணப்பப் படிவங்களில் திருத்தங்களை செய்யவேண்டும் எனின் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் வரையில் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6.2 **பரீட்சை விதிமுறைகள்**

6.2.1 இப் பரீட்சையானது தமிழ் மொழி மூலமாக நடைபெறும்.

6.2.2 இவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலின் இறுதியில் உள்ள உப அட்டவணை 03 இல் உள்ள மாவட்டங்களில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை நடைபெறும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் உப அட்டவணை 03 இற்கு அமைவாக இருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மாவட்டங்களை பின்னராக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை தாபிப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின் அவ் விண்ணப்பதாரர்கள் அவர்களது இரண்டாவது விருப்பாக குறிப்பிட்டிருக்கும் நகரத்தில் அல்லது அதற்கு அண்மையில் உள்ள வேறு நகரமொன்றில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையமொன்றுக்கு அனுப்பப்படுவார்கள். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து நகரங்களிலும் அல்லது அதிக எண்ணிக்கையிலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை தாபிப்பதற்காக போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கையெடுப்பார்.

6.2.3 சகல விண்ணப்பதாரர்களும் இப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தமிழ் மொழி மூலம் மாத்திரமே தோற்ற வேண்டும்.

6.2.4 பரீட்சையானது இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும். சகல விண்ணப்பதாரர்களும் இரண்டு (02) வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரங்களிலும் ஆகக் குறைந்தது 40% சதவீதமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

6.2.5 ஒரு தடவையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை தொடர்பில் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

6.3 ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

6.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன்கூட்டிய ஊகிப்பின் படியான தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நிகழ்நிலை மூலமாக மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்பட்ட உடன் அது தொடர்பான அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின்

இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும் என்பதுடன் அவ் விடயம் குறித்து உரிய விண்ணப்பதாரரும் குறுந்தகவல் மூலம் அறியப்படுத்தப்படுவார். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளையில் விசாரிக்க முடியும். அவ்வாறாக விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வதியும் ஒருவராயின் மேற்கூறப்பட்ட விபரங்களுடன் தொலை நகல் மூலமாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாக பெற்றுக் கொள்வதற்காக தொலை நகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பியதன் பின்னர் அது தொடர்பாக விசாரிப்பது பயன் மிக்கதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தங்களிடம் விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்.

07. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

7.1 விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூலமான அனுமதியின்றி பரீட்சை மண்டபத்தை மாற்றும் விண்ணப்பதாரர்களது பெறுபேறுகள் இடைநிறுத்தம் செய்யப்படும். சகல பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சைப் மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டையில் கையொப்பத்தை உறுதிப்படுத்தி அதனை முதலாவதாக அப் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் அங்கிருக்கும் மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிமுறைகளுக்கு அனைத்து பரீட்சார்த்திகளும் உட்படுவார்கள், குறித்த சட்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் அவர் முகங்கொடுக்க நேரிடும்.

**குறிப்பு 3**

விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்குவதானது அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவியொன்றை வகிப்பதற்கோ தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்பதாக அல்லது ஒரு அங்கீகாரம் என்பதாக கருதப்படாது என்பதுடன் பரீட்சையில் சித்தியடைவதும் நியமனம் பெற்றுக் கொள்வதற்கான தகைமையொன்றாக கருத்தில் கொள்ளப்படவும் மாட்டாது.

08. **பரீட்சார்த்திகளின் அடையாளம்:**

8.1 பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையக் கூடிய வகையில் தமது சுய அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆவணம் ஏறுக்கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

8.2 அவ்வாறே பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறாக தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்தில் நுழைந்தது முதல் பரீட்சை நிறைவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பதாரரின் அடையாளம் தெரியக் கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

09. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:** விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சைக்கான சட்ட விதிமுறைகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லை என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம்.

10. **பாடத்திட்டம்**:

10.1 **எழுத்து மூலப் பரீட்சை**

இப் பரீட்சைக்குரிய வினாப் பத்திரங்களின் எண்ணிக்கை இரண்டாகும். தகுதி பெறுவதற்காக இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

(i) **உளச்சார்பு –** காலம் ஒரு (01) மணித்தியாலம். (100 புள்ளிகள்)

எண்கணித ரீதியான,மொழி ரீதியான மற்றும் படங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் இடைத்தொடர்புகளுக்குரியதாக முன்வைக்கப்படும் பிரசினங்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்கரீதியான புரிதல், விளக்கமளிக்கும் திறன், வேறு நிலைமைகளில் பிரயோகிக்கும் திறன், அளவீடு, காலம் மற்றும் இடைவெளிகளுக்கிடையேயான தொடர்புகளை புரிந்துகொள்வதற்காக பரீட்சார்த்தியிடம் காணப்படும் திறன்களை கணிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வு மற்றும் சிறு வினாக்கள் வடிவிலான ஐம்பது (50) வினாக்களை வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) **பொது அறிவு –** காலம் ஒரு (01) மணித்தியாலம். (100 புள்ளிகள்)

ஆசிரியர் துறைக்குரியதாக அத் துறை தொடர்பாக உள்ள பொது அறிவு மற்றும்/ அல்லது உள்நாட்டில் இடம்பெறும் அல்லது இடம்பெற்றுள்ள கல்விசார் போக்குகள் தொடர்பில் பொது அறிவு மற்றும் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்பம், ஆசிரியர் கல்வி போன்ற துறைகள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுக் கல்விசார் நவீனமயப்படுத்தல்கள் தொடர்பிலான பொது அறிவினைப் பரிசோதிக்கும் பல்தேர்வு மற்றும் சிறு வினா விடை வடிவிலான வினாப் பத்திரமானது ஐம்பது (50) வினாக்களைக் கொண்டிருக்கும். அவ் அனைத்து வினாக்களிக்கும் விடையளிக்க வேண்டும்.

10.2 **பொது நேர்முகப் பரீட்சை**

பொது நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு 4**

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள்

சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அமைவாக பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தல் அல்லது செய்திப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கின்றனரா என்பதை பரிசீலித்தல் மற்றும் உடலியல் தகைமைகளை பரிசீலித்தல்.

10.3 **பிரயோக பரீட்சை**

பிரயோக பரீட்சையாக விண்ணப்பதாரரால் அடையாளம் காணப்பட்ட தலைப்பொன்றின் கீழ் முன்வைப்பு ஒன்றை செய்தல் வேண்டும். அதற்காக ஐந்து (05) நிமிடங்களுக்கு குறையாத நேரம் வழங்கப்படும். அதற்காக கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | செயன்முறைப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உச்சபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

**குறிப்பு 5**

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள்

ஆசிரியர் தொழிலிற்கு முக்கியமான கற்றல் – கற்பித்தல் செயன்முறை தொடர்பில் விண்ணப்பதாரருக்கு இருக்கும் திறன்களை அளவிடுதல்.

10.3.1 **பிரயோக பரீட்சைக்கான செயன்முறை**

(i) பிரயோகப் பரீட்சைக்காக ஐந்து (05) நிமிடங்களுக்கு குறையாத நேரம் வழங்கப்படும்.

(ii) பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் இருபத்தி ஐந்தாகும் (25).

(iii) பிரயோகப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியதிகளுக்கும் ஆகக் குறைந்தது இரண்டு (02) புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iv) பிரயோகப் பரீட்சையானது கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும்.

10.3.2 **நியதிகளின் நோக்கங்கள்**

(i) குறிக்கோள் மற்றும் பிரவேசம்

பாடத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக தெளிவுபடுத்துதல் மற்றும் பாடத்தினுள் பிரவேசிக்கும் திறனை மதிப்பிடுதல்.

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு

ஆசிரியர் ஒருவர் என்றவகையில் சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சிறந்த முறையில் குரலைக் கட்டுப்படுத்தக்கூடிய திறனை மதிப்பிடுதல்.

(iii) தொடர்பாடலில் தெளிவு

கற்றல் கற்பித்தல் செயன்முறைக்குரிய விடயங்களை விளைதிறன் மிக்க வகையில் தொடர்பாடல் செய்யக்கூடிய திறனை மதிப்பிடுதல்.

(iv) நேர முகாமைத்துவம்

வழங்கப்படும் கால வரையறையினுள் குறிக்கோள்களை அடையக்கூடிய திறனை மதிப்பிடுதல்.

(v) முன்வைப்பு நுட்பமுறைகளின் பயன்பாடு

குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக முன்வைப்பு நுட்பமுறைகளை நேர்த்தியாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல்.

11. **பரீட்சைக் கட்டணங்கள்:**

11.1 பரீட்சைக் கட்டணம் ரூ. 600 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தும் முறையொன்றினூடாக மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்.

I. ஏதேனும் ஒரு வங்கியின் கடன் அட்டை மூலமாக (Any Bank Credit Card)

II. இணையத்தினூடாக கட்டணம் செலுத்தும் வசதிகளில் செயற்படுத்தப்பட்டுள்ள வங்கி டெபிட் அட்டைகளூடாக (Through any bank debit card with internet transaction facilities)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை ஊடாக ( Bank of Ceylon Online Banking Method)

IV. ஏதேனும் ஒரு இலங்கை வங்கிக் கிளையில் ( Bank of Ceylon Teller Slip Payments)

**குறிப்பு 6**

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு முறையினூடாக கட்டணம் செலுத்தவேண்டிய முறை தொடர்பிலான ஆலோசனைகள் இணையத் தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

11.2 கட்டணம் கிடைக்கப்பெற்றதும் குறுந் தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலமாக அறியத் தரப்படும். பரீட்சைக் கட்டணமாக மொத்த தொகையினையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் பரீட்சை கட்டணங்களை குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளூடாக கட்டணம் செலுத்தும் போது எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

11.3 பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள வழங்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றம் செய்யப்படமாட்டாது

12. **பரீட்சைப் பெறுபேறுகள்:**

12.1 எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றி பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களது எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையின் மொத்த புள்ளிகளின் முன்னுரிமை வரிசைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சம எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் உள்ளடங்கும் வகையில் இறுதி பெறுபேறுகள் பட்டியல் தயாரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனித்தனியாக பெறுபேறுகளை அனுப்பிவைப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படும்.

13. விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்துவதற்கான ஆலோசனைகள்:

கீழே தரப்பட்டுள்ள உப அட்டவணைகளைப் (01, 02, 03 மற்றும் 04) பயன்படுத்தி நிகழ்நிலை விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உப அட்டவணை 01

| மொழி மூலம் | குறியீட்டிலக்கம் |
|---|---|
| தமிழ் மொழி மூலம் | 03 |

உப அட்டவணை 02

| மாகாணம் | குறியீட்டிலக்கம் |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வடமேல் மாகாணம் | 04 |
| ஊவா மாகாணம் | 05 |
| சப்பிரகமுவ மாகாணம் | 06 |

உப அட்டவணை 03

| வதிவிட மாவட்டம் இலக்கம் | மாவட்ட இலக்கம் | வதிவிட வலயம் |
|---|---|---|
| கொழும்பு | 01 | ஹோமாகமை |
| களுத்துறை | 02 | ஹொரணை |
| | | மத்துகமை |
| | | மத்துகமை |
| கண்டி | 03 | கண்டி |
| | | கம்பளை |
| | | வத்தேகம |
| | | தெல்தெனிய |
| | | கட்டுகஸ்தோட்டை |
| | | தெனுவர |
| மாத்தளை | 04 | மாத்தளை |
| | | நாஉல |
| நுவரெலியா | 05 | நுவரெலியா |
| | | கொத்மலை |
| | | ஹட்டன் |
| | | வலப்பனை |
| | | ஹங்குரக்கெத்தை |

| வதிவிட மாவட்டம் இலக்கம் | மாவட்ட இலக்கம் | வதிவிட வலயம் |
|---|---|---|
| பதுளை | 06 | பதுளை |
| | | பண்டாரவளை |
| | | வெலிமடை |
| | | பசறை |
| | | வியலுவ |
| மொணராகல் | 07 | மொணராகல் |
| | | பிபிலை |
| காலி | 08 | எல்பிட்டி |
| | | உடுகமை |
| மாத்தறை | 09 | அக்குரஸ்ஸ |
| | | தெனியாய |
| குருணாகல் | 10 | குருணாகல் |
| இரத்தினபுரி | 11 | இரத்தினபுரி |
| | | நிவித்திகல |
| | | பலாங்கொடை |
| | | எம்பிலிப்பிட்டி |
| கேகாலை | 12 | கேகாலை |
| | | தெஹியோவிட்ட |
| | | மாவனல்லை |

உப அட்டவணை இலக்கம் 04

மாகாண வெற்றிடங்கள்

| தொடர் இல. | விடயம் | மேல் | வடமேல் | மத்திய | சப்பிரகமுவ | ஊவா | தென் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்பக் கல்வி | 50 | 06 | 331 | 131 | 78 | 13 |
| 02. | ஆரம்பக் கல்வி ஆங்கிலம் | 29 | - | 167 | 57 | 09 | - |
| 03. | விசேட கல்வி | - | - | - | 01 | - | - |
| 04. | ஆரம்ப அழகியல் | - | - | - | 08 | - | - |
| 05. | விஞ்ஞானம் | 12 | 02 | 60 | 33 | 21 | 06 |
| 06. | கணிதம் | 10 | 02 | 96 | 39 | 35 | 09 |
| 07. | தமிழ் | 02 | - | 55 | 14 | 09 | 07 |
| 08. | ஆங்கிலம் | 05 | - | 75 | 40 | 42 | 05 |
| 09. | வரலாறு | 02 | 05 | 60 | 19 | 21 | 05 |
| 10. | இஸ்லாம் | - | - | - | 03 | 04 | - |
| 11. | ரோமன் கத்தோலிக்கம் | 01 | - | 17 | 01 | - | 02 |
| 12. | கிறிஸ்தவ சமயம் | - | - | 8 | 03 | - | 03 |
| 13. | புவியியல் | 09 | - | 50 | 45 | 31 | 02 |
| 14. | குடியுரிமைக் கல்வி | 02 | - | 50 | 41 | 21 | 04 |
| 15. | வணிகம் மற்றும் கணக்கீடு | 03 | - | - | 19 | 21 | - |
| 16. | முயற்சியாண்மைக் கல்வி | - | - | - | 01 | - | - |
| 17. | இரண்டாம் மொழி சிங்களம் | 2 | - | 90 | 06 | 32 | 02 |

| தொடர் இல. | விடயம் | மேல் | வடமேல் | மத்திய | சப்பிரகமுவ | ஊவா | தென் |
|---|---|---|---|---|---|---|---|
| 18. | கர்நாடக சங்கீதம் | 01 | - | 25 | 36 | 02 | 02 |
| 19. | சித்திரம் | 03 | 01 | - | 36 | 22 | 05 |
| 20. | நடனம் (பரதம்) | 03 | - | 25 | 35 | 28 | 02 |
| 21. | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | - | - | - | 05 | - | 04 |
| 22. | இலக்கிய நயம் (தமிழ்) | - | - | - | 10 | 10 | - |
| 23. | இலக்கிய நயம் (அரபு) | - | - | - | 02 | - | - |
| 24. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 02 | - | - | 47 | 49 | 05 |
| 25. | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | 04 | - | - | 15 | 15 | 01 |
| 26. | நுண்கலை | - | - | - | 01 | - | - |
| 27. | மனைப்பொருளியல் | 08 | - | - | 14 | 15 | - |
| 28. | செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்கள் | 03 | - | - | 05 | 06 | - |
| 29. | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 08 | 03 | - | 40 | 12 | 06 |
| 30. | தொடர்பாடல் மற்றும் ஊடக கல்வி | 02 | - | - | 01 | - | - |
| 31. | இந்து சமயம் | 04 | - | 65 | 12 | 16 | 05 |
| | மொத்தம் | 165 | 19 | 1174 | 720 | 499 | 88 |

14. விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை மூலமாக மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

15. நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எந்தவிதத்திலும் மீளக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

16. அதே போன்று நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

17. தாங்கள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயத்தை பின்னராக மாற்றம் செய்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது.

18. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அவ் விடயம் தொடர்பில் தீர்மானமெடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும் என்பதுடன் ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் போன்ற எந்தவொரு விடயம் தொடர்பிலும் இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும்.

19. சிங்களம். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது என்பதாக கருதப்படும்.

ஜே.எம் திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு, இசுருபாய,
பத்தரமுல்ல.
2024.06.

06-143